2025 டிசம்பர் 03: பி.ப 01.30 மணி
கோவை. இல : 2025/05

## ஊடக வெளியீடு

**இலங்கையில் ஏற்பட்டுள்ள தேசிய அனர்த்த சூழ்நிலைக்கு மத்தியில் பங்களிப்பு செய்யும் நன்கொடையாளர்களுக்கான தகவல்**

இலங்கையில் ஏற்பட்டுள்ள தேசிய அனர்த்த சூழ்நிலையின் போது பங்களிப்பு செய்யும் தாராள மனப்பான்மை கொண்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது வழங்கப்படுகிறது.

இலங்கையைப் பாதித்துள்ள இந்த அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட உங்கள் சக குடிமக்களுக்கு நீங்கள் அனைவரும் செய்யும் தாராளமான உதவிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பதற்கான உங்களின் நன்கொடை மற்றும் அர்ப்பணிப்பு இந்த நேரத்தில் மரியாதையுடன் பாராட்டப்படுகிறது, மேலும் இது ஒரு மகத்தான ஆதரவாக அமைந்துள்ளது.

உங்கள் உதவி சரியான முறையில், முழுப் பொறுப்புடன் தேவைப்படுபவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வது எங்களின் முதன்மைப் பொறுப்பாகும். எனவே, மாவட்டச் செயலகங்கள் / பிரதேச செயலகங்கள் இப்போது தங்கள் அதிகார வரம்புகளுக்குள் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களின் குறிப்பிட்ட தேவைகள் தொடர்பான துல்லியமான தரவு அமைப்பை இற்றைப்படுத்தியுள்ளன.

இந்தத் தரவு, நீங்கள் வழங்கும் உதவியை அவர்களின் தேவைகளுடன் சீரமைக்க உதவும், இதன் மூலம் எவரும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்யலாம். இதன்மூலம், எந்தப் பகுதியையும் அல்லது தனிநபரையும் தவறவிடாமல், உண்மையான தேவை உள்ளவர்களுக்கு சமநிலையுடனும் முறையான விதத்திலும் உதவிகளை வழங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

உங்கள் நன்கொடையை மாவட்டச் செயலகங்கள் / பிரதேச செயலகங்களுடன் ஒருங்கிணைப்பதில் உங்கள் கவனம் செலுத்தப்படும் என்று நம்புகிறேன்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்

**Email Address: cg@esgovsl.com**
අංක 150, ආර්.ඒ. ද මෙල් මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
எண். 150, ஆர்.ஏ. டி மல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை
No. 150, R.A. De Mal Mawatha, Colombo 03, Sri Lanka